**செய்தி வெளியீடு எண்: 922** **நாள்:02.12.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய சட்டம் 2008 (எண். 31 of 2008), பிரிவு 3ல் உட்பிரிவு 1–ன் படி தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு தலைவர் மற்றும் 3 உறுப்பினர்கள் பதவிக்களுக்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தால் ஆணையத்தால் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் தேவையான தகுதி குறித்த விவரங்கள் www.tn.gov.in/department/30 (Social Welfare and Nutritious Meal Programme Department) என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கு தகுதிவாய்ந்த நபர்கள் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்களை தனித்தனியே உரிய குறிப்பிடப்பட்ட படிவத்தில் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து, உரிய ஆதார ஆவணங்களுடன் 18.12.2020 அன்று மாலை 5.30 மணிக்குள் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

<u>முகவரி</u>

உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்,
கலச மஹால், சேப்பாக்கம்,
சென்னை – 5.

முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்த சேராத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்,
சென்னை – 5

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**